செய்தி வெளியீடு எண். 63 நாள்: 29.01.2018

# பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை சார்பில் பல்வேறு துறைகளின் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிபவர்களுக்கு அலுவலகப்பணிகள் குறித்த புத்தாக்கப் பயிற்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை சார்பில் பல்வேறு துறைகளின் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிபவர்களுக்கு அலுவலகப்பணிகள் குறித்த புத்தாக்கப் பயிற்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி.இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.01.2018) துவக்கி வைத்தார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது:

திருவள்ளூர் மாவட்டத்தில் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை சார்பில் அரசின் பல்வேறு துறைகளில் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர்களாக பணிபுரிந்து வரும் 50 நபர்களுக்கு (30 உதவியாளர்கள், 20 இளநிலை உதவியாளர்கள்) 29.01.2018 முதல் 02.02.2018 வரை 5 நாட்களுக்கு அலுவலகப்பணிகளை கவனிப்பது குறித்த புத்தாக்க பயிற்சி (Refreshment Training) வழங்கப்படுகிறது.

இந்த புத்தாக்கப் பயிற்சி, தேர்ந்த அரசு பணியில் அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற துணை ஆட்சியர்களை கொண்டு அரசு பணியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த புத்தாக்கப் பயிற்சியின்போது அலுவலக நடைமுறை, பதிவேடு பராமரித்தல், தமிழ்நாடு குடிமை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், அடிப்படை விதிகள், பொது மக்கள் தொடர்பு, ஓய்வூதிய விதிகள் போன்ற 12 இனங்களை தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இப்பயிற்சியில் கலந்துக்கொண்டவர்களுக்கு பயிற்சியின் இறுதி நாளன்று உரிய சான்றுகள் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

இந்த புத்தாக்கப் பயிற்சியில் காஞ்சிபுரம்-திருவள்ளூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு) திரு.கோ.சுப்பிரமணி, துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.இரா.லட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**